[1995 மார்ச் 28

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நூற்பு மையத்தை மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரும், தாட்கோ கோட்ட வளர்ச்சி அலுவலரும் மற்றும் எங்களுடைய கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உதவி இயக்குநரும் கொண்ட குழுவை அமைத்து, பார்வையிட்டு ஆய்ந்து குறிப்புகளை வாரியத்திற்கு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தபோது, தற்போது அந்த நூற்பு மையத்தை தாட்கோ நிறுவனத்திற்கு நீங்கள் ஒப்படைத்து விட்டால் அதை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம், எதிர்காலத்தில் மீண்டும் அந்த நூற்பு மையத்தை திறப்பதற்கு கதர் வாரியமானது நடவடிக்கை எடுக்கும் நேரத்தில் நாங்கள் ஒப்படைக்கிறோம் என்று தெரிவித்துக் கொண்டு, அதை தாட்கோ நிறுவனம் எடுத்துக் கொள்வதற்கு கேட்டிருக்கிறார்கள். கதர் வாரியத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

132—

காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலைப் பகுதியில் தூய்மைக் கேட்டைப் போக்குதல்

*34235—**திரு. ஆர். தங்கராஜ்** :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி, காட்டூர், கோத்தாரி சர்க்கரை ஆலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எரிசாராய தொழிற்சாலையினால் ஏற்படும் சுற்றுப்புற சூழ்நிலைத் தூய்மைக்கேட்டைப் போக்க இதுவரை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், சிறுமயன்குடியில் உள்ள திருவாளர்கள் கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் எரிசாராய தொழிற்சாலையினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத் தடுக்க அந்நிறுவனம் சுற்றுப்புறசூழ்நிலை மாசுபடுத்தாமலிருக்கத் தேவையான காற்று மற்றும் நீர் மாசு கட்டுப்பாடு உபகரணங்களை அமைப்பதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1995 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

பம்பாய் நகருக்குள் பிறமாநிலத்தவர்கள் நுழைய அனுமதிசீட்டு வழங்கப் போவதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பம்பாயில் வாழ்கிற தமிழர்கள் உட்பட பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பம்பாய் நகருக்குள் நுழைவதைத் தடைசெய்கிற வகையில் அனுமதிச் சீட்டு வழங்கப் போவதாக ஒரு அறிவிப்பை மகாராஷ்டிரா மாநில அரசு விடுத்திருப்பதாகக் கூறி, அதன் காரணமாக எழுந்துள்ள நிலையை விவாதிக்க வேண்டுமென்று பேரவை விதி *56*—ன் கீழ் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது இன்னொரு மாநிலப் பிரச்சினையை உள்ளடக்கியதாக இருக்கிற காரணத்தால் அதை ஒத்திவைப்புப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு விவாதிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று கருதி அது குறித்து சிறப்புக்கவன ஈர்ப்பாக எழுப்ப இப்போது அனுமதிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் இந்த அறிவிப்பைக் கொடுத்தவர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் *11-25*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. மனோகர் ஜோஷி அவர்கள் பம்பாய் நகருக்குள்ளே நுழைவதற்கு இனிமேல் முன்னனுமதி பெறவேண்டும், 'என்டரி பெரிமிட்' பெறவேண்டும் என்பதைப் போல ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

பம்பாய் நகரத்தில் ஜனப்பெருக்கம் அதிகரித்து வருவதாகவும், அதைக் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது என்றும் சொல்லி, இனிமேல்